REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

2,700 புதிய பட்டதாரிகள்

சென்னை, ஆக. 23—

நேற்று நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் மொத்தம் 2,700 பேர் பல்வேறு பட்டங்களைப் பெற்றனர். இவர்களில் 1,522 பேர் நேரில் வந்து பட்டங்களைப் பெற்றனர். இவ்வாண்டு தேர்வு பெற்ற பட்டதாரிகளில் 451 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மலர் 5] சென்னை: ஆவணி 7உ வெள்ளி (23—8—57) ★ ★ வெளியூர்: ஆவணி 8உ சனி (24—8—57) [இதழ் 60

மக்கள் சபையில் தி. மு. க. இலட்சியக் குரல்

அந்தமான், இலங்கைத் தமிழர்களின் இன்னலைக் களையக் கோரிக்கை

பறிபோன தமிழகப் பகுதிகளில் வாக்கெடுப்பு நடத்த வலியுறுத்தல்

சட்டத்தாலோ பலாத்காரத்தாலோ ஒற்றுமை உருவாக முடியாதென எடுத்துக்காட்டு

திராவிட நாடு முழக்கம் எழுந்த வரலாறு குறித்து ஈ. வெ. கி. சம்பத் விளக்கம்

மக்கள் சபையில், உள்நாட்டு இலாகா மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்துகொண்டு தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள் ஆற்றிய உரையின் முழு விவரமும் இங்கு தரப்படுகிறது:—

தென் மாநில சர்க்கார் ஊழியர்கள் அவல நிலை!

"மத்திய சர்க்கார் மற்றும் மாநில சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்கள் வேலை நிலைகள் இவற்றில் நிலவும் ஏற்றத் தாழ்வுப் பிரச்சினை, மாநில மத்திய அரசுகள் ஏதோ முயற்சி செய்திருப்பதாகத் தோன்றினாலும், இன்னும் பரிகாரம் தேடப்படாததாகவே இருக்கிறது.

"குறிப்பாக, 'இந்தியா முழுவதிலும் வேலைத் தரத்திலும், திறத்திலும் எவருக்கும் இரண்டாவதாக இல்லை' என்ற நிலையிலிருக்கும் தென்னாட்டு (கெஜட் பதிவு பெறாத சர்க்கார்) ஊழியர்கள்தான் மிகக் குறைந்த சம்பளமும் இதரப் படிகளும் பெற்றுவருகின்றனர். இந்த நிலை நெடுநாட்களாக நின்று நிலவி வருவதாகும். இந்தியாவின் தென் பகுதியில் நிலவும் இந்த நெடுநாளைய பேதாபேதத்தையும் சீர்கேட்டையும் போக்குவதற்கு, கனம் உள்நாட்டு அமைச்சர் தம்மால் முடிந்தவரை முயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். உத்தேசிக்கப்பட்டுள்ள இரண்டாவது சம்பள கமிஷனின் விசாரணை வரம்பிற்குள், இந்த மாநில சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்கள், படிகள், வேலை நிலைகள் இவற்றையும் சேர்ப்பதற்கு உள்நாட்டு மந்திரி தனது செல்வாக்கை உபயோகிப்பார் என நம்புகிறேன்— உபயோகிக்க வேண்டுமென விரும்புகிறேன்.

கோரிக்கையை ஏற்க மறுப்பது நியாயமா?

"அந்தமான், நிகோபார், மற்றும் லட்சத் தீவுகள் முதலான தீவுகளில் நிலவும் நிலைகள்பற்றிச் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

"அந்தமான் மக்கள், தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் மக்கள் சபையில் இருக்கவேண்டுமெனக் கோருகிறார்கள். அந்தக் கோரிக்கைக்கு செவிமடுக்க சர்க்கார் மறுப்பது நேர்மையானதல்ல.

"அங்குள்ள ஸ்தல ஆலோசனை கமிட்டிகூட நியமனம் செய்யப்பட்ட ஒரு நிறுவனம்தான். அந்தக் கமிட்டி ஏன், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாயிருக்கக்கூடாது என்பதைப் புரிந்துகொள்ளமுடியவில்லை. நியமனக் கமிட்டிக்குப் பதிலாக, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட சபை இருப்பதினால் என்ன தீங்கு நேரிட்டுவிடும் என்று சர்க்கார் அஞ்சுகிறது? அந்த மக்களின் இரு நியாயமான கோரிக்கைகளையும் சர்க்கார் ஏற்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தமான் தமிழருக்கு அநீதி இழைப்பானேன்?

"அங்குள்ள சர்க்கார் நடத்தும் ஒரு உயர்நிலைப் பள்ளி குறித்து சில வார்த்தைகள் சொல்லவிரும்புகிறேன். அந்தப் பள்ளியில் இந்தி, வங்காளி, ஆங்கிலம் ஆகிய மொழிகள் கற்றுத்தரப்படுகின்றன. ஆனால் தமிழ் கற்றுத்தரப்படுவதில்லை. இது தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடிய அநீதியாகும். ஏனெனில் அங்கு சுமார் 46,000 தமிழர்கள் வாழ்கின்றனர்; அவர்கள் அங்குள்ள மக்கள் தொகையில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமானவர். எனவே இந்த அநீதி உடனடியாகத் துடைக்கப்பட்டாக வேண்டும்.

"அல்லது, தென்னாட்டு மக்களை அலட்சியப்படுத்துவது, அவர்களுக்கு ஓரவஞ்சனை புரிவது என்ற டெல்லியின் வழக்கமான கொள்கையின்படி இழைக்கப்பட்டுள்ள அநீதிகளுடன் இதையும் சேர்த்துகொள்ள வேண்டியதுதானா?

இலங்கைத் தமிழர் இன்னலைத் துடைப்பீர்!

'இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொன்றையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

"ஆயிரக்கணக்கான, இந்திய வம்சா வழியினர் இலங்கையிலிருந்து தூரத்தப்படுகின்றனர். அவர்களில் மிகப் பெரும்பாலானோர் தமிழர்களாயிருக்கின்றனர். அவர்கள் மிகவும் ஏழ்மை நிலையிலிருப்பவர்கள். அவர்களுக்குத் தமிழ்நாட்டில் ஏதேனும் வேலையோ அல்லது வேறு வாழ வழியோ கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லை; ஏனென்றால், மத்திய சர்க்காரால் மிகவும் புறக்கணிக்கப்பட்ட தென்னாட்டு மாநிலங்களுள் ஒன்றாக இருப்பதால், தமிழ்நாட்டில் ஏற்கனவேயே வேலையில்லாத் திண்டாட்டம் மிகக் கடுமையாக இருக்கிறது.

"இந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவியும் ஊக்கமும் தருமாறு நான் கனம் உள்நாட்டமைச்சரை மிகவும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில், அவர்களுக்கு இதுவரை மத்திய சர்க்காரோ, மாநில சர்க்காரோ எந்தவித உதவியும் செய்யவில்லை.

"அவர்களை தாமதமின்றி அந்தமான், நிக்கோபார் தீவுகளில் குடியேற்றி வாழ்வுதரத் தக்க விதத்தில் திட்டம் தீட்டி நிறைவேற்றுகிற வகையில், உதவி இருக்கவேண்டும்.

புறக்கணிக்கப்பட்ட நிலைமை ஏன்?

"அந்தமான், நிகோபார், லட்சத் தீவுகள் முதலிய தீவுகளுக்கு அதிகமான போக்குவரத்து, மற்றும் செய்திப் போக்குவரத்து வசதிகள் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றன. இந்த இரண்டு தீவுக் கூட்டங்களில் லட்சத் தீவுக் கூட்டம்தான், மிகவும் கஷ்டப்படுகிறது.

"இவை, அண்மையில்தான் மத்திய சர்க்கார் நிர்வாகத்தின் கீழ் வந்தன; எனவே, அவற்றின் பின்தங்கிய நிலை அத்தனைக்கும் மத்திய சர்க்கார்தான் காரணம் என நான் கூறவில்லை. ஆனால், இந்தத் தீவுகள் நெடுங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டிருப்பதையும், அவற்றின் மிகப் பின்தங்கிய நிலையையும் சர்க்கார் கவனித்தாக வேண்டும்.

முன்னேற்றப் பாதையில் செல்ல வழிகோலுவீர்!

"இந்தத் தீவுகளுக்கு, முதலில் தேவையான அளவு, முறையான கப்பல் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டால், அவர்கள் நம்முடன் சுலபமாகத் தொடர்பு கொள்ள வழி ஏற்படும்; அவர்களும் முன்னேற்றப் பாதையில் செல்லமுடியும்.

"அந்தமான் தீவுகளுக்குக்கூட போதுமான அளவு ஒழுங்கான போக்குவரத்து வசதிகள் இருப்பதாகக் கூற முடியாது. இந்தத் தீவுகளுக்கு சென்னையிலிருந்தும் — கல்கத்தாவிலிருந்தும் கப்பல் போக்கு-வரத்து அதிகரிக்கப்பட வேண்டும். அந்தமானுக்கும் — கல்கத்தாவிற்கும் இடையே விமானப் போக்கு-வரத்து திரும்பவும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்பதுடன், சென்னைக்கும் — அந்தமானுக்குமிடையேயும் விமானப் போக்கு-வரத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

"அந்தமானில் வெட்டு மரத் தொழிலுக்கு நிரம்ப வாய்ப்புகள் உண்டு என்பதுடன், இந்த இரு தீவுக்கூட்டங்களிலும் நவீன முறைப்படி மீன்பிடிக்கும் தொழிலுக்கும் நிறைய இடமிருக்கிறது.

"அடுத்தாற்போல், மாநிலப் புது அமைப்பு குறித்து, பம்பாயைச் சேர்ந்த சில உறுப்பினர்

(4-ம் பக்கம் பார்க்க.)

நங்கவரம் அறப்போர்

எப்பகுதிகளிலும் போலீஸ் படை

அண்ணா வேண்டுகோளுக்கிணங்க தோழர்கள் அமைதி காத்தனர்

(டிரங்க் செய்தி)

குளித்தலை, ஆக. 23—

உழவர்கள் வழக்கம்போல் வயலில் இறங்கி வேலை செய்கிறார்கள்; இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் முன்பே அறிவித்திருந்தபடி, 23—8—57 காலை 9 மணிக்கு, நங்கவரம், கோவிந்தனூர், மேலநங்கவரம், குமாரமங்கலம் அழிஞ்சனூர் ஆகிய பகுதிகளிலுள்ள விவசாயிகள் தங்கள் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள வழக்கம்போல வயலில் இறங்கி உழவுத் தொழிலில் ஈடுபட்டனர்.

நேற்று (22—8—57) குளித்தலையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், அண்ணா அவர்கள் விடுத்த கடைசி வேண்டுகோளுக்கிணங்க, நங்கவரத்தில் கூடிய ஆயிரக்கணக்கான பொதுமக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும் அமைதி காத்தார்கள்.

அறப்போர் நடைபெறும் பகுதிகளில் தோழர் மு. கருணாநிதி திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில்-தருமலிங்கம், தோழர் பராங்குசம் மற்றும் விவசாயிகள் முன்னேற்றச் சங்கத் தலைவர்கள் அனைவரும் நேரில் நிலையைக் கண்டு கட்டுப்பாடு தவறாமல் அமைதியைக் காப்பதில் பங்கு பெற்றார்கள்.

இன்று 76 விவசாயிகள் வேலையைத் துவங்கினார்கள். அப்பகுதிகளில் போலீஸ் பாதுகாப்பும் இருந்துவருகிறது. நாளையதினம் அதிகமான விவசாயிகள் வேலையில் ஈடுபடுவார்கள்.

விவசாயிகள் அறப்போர் எதிரொலி

குளித்தலை வட்ட கிராமங்களில் 144 தடையுத்தரவு

திருச்சி, ஆக. 23—

இன்று, நங்கவரத்தில் துவங்குகிற விவசாயிகள் அறப்போரின் விளைவாக, ஆட்சியாளர் 144 அடக்குமுறைச் சட்டத்தைத் துணைக்கு அழைத்திருக்கின்றனர்!

குளித்தலை தாலுகாவிலுள்ள கிராமங்களில் நான்கு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூட்டம் கூடுவதைத் தடை செய்து, கி. பு. கோ. 144-வது பிரிவின்கீழ் குளித்தலை தாசில்தார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

குளித்தலை வட்டத்தில் நங்கவரம், நெய்தலூர், குமாரமங்கலம் பொய்யாமணி ஆகிய கிராமங்களில் விவசாயிகள் அறப்போர் துவக்கத் திட்டமிடப்பட்டிருந்தது அறிந்ததேயாகும்.

★

அனுதாப வேலைநிறுத்தம்

குளித்தலையில் ரம்பத் தொழிலாளர்கள், அவல் தொழிலாளர்கள், வண்டித் தொழிலாளர்கள் ஆகியோர், உழவர் பெருமக்கள் அறப்போரையொட்டி அனுதாப வேலைநிறுத்தம் செய்தனர்.

மற்ற விவரங்கள் நாளை வெளிவரும்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 23—8—57 வெள்ளி

அறப்போர் வெல்க!

நங்கவரம் உழவர் உழத்தியர் அறப்போர்க் களம் புக நாள் குறித்து விட்டனர். போர்க்களத்தின் முதல் செய்தி, இவ் விதழ் மக்கள் கையில் இருப்பதற்கு முன்பே மக்களுக்குக் கிடைத்துவிடும்.

அறப்போர்க்களத்தை நங்கவரம் உழவர்களாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவில்லை அவர்கள்மீது, அப்பபங்கரப் பொறுப்பை, தனது மந்த கதியின் காரணமாக சென்னை அரசாங்கம் வலிய திணித்திருக்கின்றது என, நேற்றே நாம் குறிப்பிட்டிருந்தோம்.

உழவர்கள் பாதுகாப்புச் சட்டத்தை, உழவர் பெருமக்களின் நலம்கோரி, எவர் தூண்டுதலும் இன்றி, தம்மிச்சையாக நடைமுறைக்குக் கொண்டுவந்ததாக சென்னை ஆட்சியினர் பொக்கம் பேசிக்கொள்ளுகின்றனர். அதுபோன்றே விளைவில் 60—40 ஏற்பாட்டையும், தம் இச்சையாக நடைமுறைக்குக் கொண்டுவந்ததாக அதே காங்கிரசு ஆட்சியினர் பீத்திக் கொள்ளுகின்றனர்.

ஆட்சியினரின் அக்கூற்றை மறுத்து, தங்கள் கிளர்ச்சியின் உறுபயனாகவே, வேண்டா வெறுப்பாக காங்கிரசு ஆட்சியினர் அவ்விரு சட்டங்களையும் உருவாக்கினதாக, உழவர் நல்வாழ்வில் தங்களுக்கு மட்டுமே அக்கறை உண்டு எனப் பசப்பிவரும் வேறு சிலரும் கூறிவருகின்றனர். அதற்காகத் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்வதுடன், அதற்காக பொதுமக்கள் பாராட்டும் தங்களுக்கே இருக்கவேண்டும் என்றும் அவர்கள் வாதிட்டு வருகின்றனர்.

விவாதத்திற்காக, இவ்விரண்டும் உண்மையானது என்றே வைத்துக்கொள்ளுவோம். தாங்கள் ஆற்றியுள்ள பணியின் காரணமாக குறிப்பிட்ட மக்கள் பகுதியினருக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டு இருக்கக்கூடுமானுல் அதற்குரிய உரிமை பாராட்டிக்கொள்ள, அவ்வாறு பாடுபட்டவர்கள் முன்வருவதில் தவறு எதுவுமில்லை. அத்தகையவர்களுக்கு அளிக்க வேண்டிய மதிப்பை அளிக்கக் கூடாது எனக் கூறும் சிறுமதியும் நமக்குக் கிடையாது.

தங்கள் முயற்சியாலும் கிளர்ச்சியாலும்தான் மேற்படி சட்டங்கள் இரண்டும் உருவாக்கப்பட்டன எனக் கூறி வாய்மூடுவதற்குமுன், எவருடைய நலத்தைப் பாதுகாப்பதற்காக சட்டமியற்றப்பட்டதோ அதே மக்களில் ஒரு பகுதியினர் ஏற்கனவே பெற்றிருந்த நலத்தையும் பறிப்பதற்கு அந்தச் சட்டம் பயன்பட்டுவரும் விந்தையை நங்கவரத்தில் காண்கிறோம். உழவர்கள் நலன் காக்க சட்டமியற்றியது தாங்கள்தான் எனப் பீத்திக் கொள்ளுகின்ற ஆளவந்தார்கள், அதைச் சொல்லி வாய் மூடுமுன், நங்கவரம் உழவர்கள் அதே சட்டத்தால் வாழ்விழந்துத் தவிப்பதையும் அதே ஆளவந்தார்கள் காண்கின்றனர்.

காங்கிரசு ஆளவந்தார்கள் இயற்றிய உழவர்கள் பாதுகாப்புச் சட்டம் நங்கவரம் உழவர்களைப் பொறுத்தவரையில் உருக்குலைந்து போய்விட்டது. உயர் நீதிமன்றம் தந்த தீர்ப்பு நங்கவரம் உழவர்களுக்குக் கிடைத்துவந்த குறைந்தபட்ச ஊதியத்தையும் ஒரேயடியாகப் பறித்துப் போட்டுவிட்டது.

இது நடந்தது ஏப்ரல் இரண்டாவது கிழமையில். அன்று முதல் நங்கவரம் உழவர்களை, அப்பகுதி நிலப் பிரபுக்களில் சிலர், அதே உழவர்கள் நீண்டகாலமாகப் பயிரிட்டுவந்த நிலங்களில் காலடிகூட எடுத்து வைக்கக்கூடாது எனத் தடுத்து விட்டனர். உழவர்கள் நிழல்கூட நிலத்தில் படக்கூடாது எனத் தடை விதித்துவிட்ட கருணாகர மூர்த்திகளும் நங்கவரத்தில் உண்டு.

கை ஏர்—மாட்டு ஏர் வாரம்தாரர் என இருந்த நிலையும் தொலைந்து, வெறும் விவசாயக் கூலிகள் என்ற இழிநிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டனர் நங்கவரம் உழவர்கள்—ஆளவந்தார்கள் உழவர் பாதுகாப்புக்கென உருவாக்கிய சட்டத்தின் விளைவாக! வேலியே பயிரை மேய்ந்தது! வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தது!

நான்கு திங்களாக நங்கவரம் உழவர்கள் வேலையின்மைக்கு ஆளாகியுள்ளனர். பட்டினிக் கொடுமைக்கு அவர்கள் பலியாகிவருகின்றனர்.

தாங்கள் இயற்றிய சட்டம் உயர் நீதிமன்றத்தில் ஆற்றலற்றுப் போனதையும், அதன் பலனாக நங்கவரம் உழவர்கள் உரிமையையும் பணியையும் இழந்துதவிப்பதையும் சென் ஆட்சியினர் அறிந்தே உள்ளனர். அவர்கள் இதயம் துடிக்கவில்லை. சட்டத்தைத் திருத்தி, நங்கவரம் உழவர்களின் வளைந்த வாழ்வை நிமிர்த்தவேண்டுமே என்ற நல்லெண்ணம் அவர்களுக்கு ஏற்படவில்லை.

தம்மிச்சையாக சட்டத்தைத் தக்கமுறையில் திருத்தவேண்டியவர்கள், துயருறும் உழவர்கள் கோரியும் சட்டத்தைத் திருத்தி அமைக்க முன்வரவில்லை. நான்கு திங்களாகக் காலந் தாழ்த்திவந்தனர்.

இளவல் கருணாநிதி சட்டசபையில் நிலைமையை விளக்கிக் காட்டினார். அதன்பிறகாவது ஆட்சிபீடம் தனது கடமையைச் செய்யத் துணிந்ததா என்றால், இல்லவே இல்லை.

குளித்தலை பகுதி விவசாய முனனேற்றச் சங்கத்தினர், விவசாய அமைச்சரைக் கண்டு, நங்கவரம் உழவர்படும் வேதனையைத் தெளிவுபடுத்தினர். நங்கவரம் வந்து—வரமருளுவதாக விவசாய அமைச்சர் திருவாய் மலர்ந்தருளினர்.

நிலப்பிரபுக்கள் பிடிவாதமாக இருந்துவிட்டனர். உழவர்கள் பணிந்து கொடுத்தும் 'கூலிகள்' எனத் தங்களைத் தாங்களே உழவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும் என நங்கவரம் நிலப்பிரபுக்கள் அடம் பிடித்தனர். 'கூலிகள்' என்ற சொல்லில் அடங்கியுள்ள தற்கொலை ஏற்பாட்டை நன்கு தெரிந்துகொண்ட உழவர்கள், அப்பெயர் ஏற்க மறுத்துவிட்டனர்.

முடிவு—அறப்போர்க் களம்.

நமது திராவிட முன்னேற்றக் கழகம், கழகம் என்ற நிலையில், போரின் துவக்கக் கட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது தெளிவு. ஆனால் இளவல் கருணாநிதி, அம்பில்-தருமலிங்கம், குளித்தலை-முத்துகிருட்டினன், கவுண்டம்பட்டி-முத்து உள்ளிட்ட கழகத் தோழர்கள், நங்கவரம் உழவர் அறப்போரை கண்காணிக்க முனைந்துள்ளனர் என்பது உண்மையிலும் உண்மை.

அறப்போர் — நூற்றுக்கும் நூறு அறவழி இயங்கும்.

கண்ணியம்-கட்டுப்பாடு களிநடம் புரியும்.

கடமை—வளம்பட நிறைவேற்றப்படும்.

எரிமூட்டார்-எதிர்த்துத் தாக்கார்; காங்கிரசு ஆட்சியினரும் நிலப் பிரபுக்களும் ஏவும் தாக்குதல்களை, அகமும் - முகமும் மலர உழவர் அறப்போர் படையினர் தாங்கிக்கொள்ளுவர்.

விலைமதிக்க ஒண்ணாத தம் உயிரை ஈவர் — குருதியைக் கொட்டுவர்.

நங்கவரம் உழவர் அறப்போரின் புனிதமான உள்ளடக்கம் இதுதான்- இதுவேதான்.

நங்கவரம் உழவர் அறப்போரில் நமது கழகம் நேரடியாகப் பங்குகொள்ளவில்லையானாலும், அறவழி ஆதரவு நல்குகிறது என்பதை நாம் அறிவித்துக்கொள்ளுகிறோம்.

நமது கழகம் மேற்படி அறப்போரில் நேரடியாகக் கலந்து கொள்ளுவதும கலந்துகொள்ளாததும், ஆட்சியாளர்கள் செயல்பட இருக்கும் முறையைப் பொறுத்து இருக்கிறது.

உண்மை இவ்வாறு இருக்க, அரசியல் நலங் கருதி நமது கழகம் மேற்படி அறப்போரைத் துவக்கி இருப்பதாக விவசாய அமைச்சர் தம் இயல்புக்கேற்ப, நாவசைத்திருக்கின்றார்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பு கிடைத்த நாளிலிருந்து இந்த நான்கு திங்களுக்குள்ளாக, சட்டத்தைத் திருத்தி, நங்கவரம் நிலப்பிரபுக்களின் கொட்டத்தை அடக்கி, உழவர்களின் உரிமையைக் காத்து உழவர்பால் தமக்குள்ள நல்லெண்ணத்தை விவசாய அமைச்சர் மெய்ப்பித்திருக்கும்பட்சத்தில், நிச்சயமாக, நங்கவரம் அறப்போர்க் களம் ஏற்பட்டிருக்கவே இருக்காது. அதேபோன்று, அவர் கூறுவதேபோல நமது கழகத்தவர் சிலரும் மேற்படி அறப்போரில் துணை நிற்க முன்வந்து இருக்கமாட்டார்கள்.

வாய்ப்பை அளித்துவிட்டு, அரசியல் நோக்கத்திற்காக கழகம் நங்கவரம் அறப்போரைத் தொடங்குகிறது என அமைச்சர் பேசுவது அறிவுடைமையாகாது. அவர் கூற்றில் கடுகளவு உண்மையும் இல்லை.

நங்கவரம் உழவர்கள் வாழ்க! அவர்கள் அறப்போர் வெல்க!

இந்திய ரூபாய் மதிப்பை இழக்கவில்லை என்பது தவறானது'

இந்தியப் பொருளாதார நிபுணர் உண்மையை வெளிப்படுத்துகிறார்

"உலகத்தில் முன்னேறியுள்ள நாடுகளின் நாணயங்களுக்கு உள்ள மதிப்பைவிட இந்திய ரூபாய் நிச்சயம் அதிக மதிப்பு பெற்றுள்ளது என்று சமீபத்தில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது; இந்த அறிக்கை மிகவும் தவறான கருத்தை வெளிப்படுத்துவதாகும்" என்று, குசராத் பல்கலைக் கழகக் காவலரும், இந்தியப் பொருளாதார நிபுணருமான டாக்டர் பி. ஆர். செனாய் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை எச்சரிக்கையுடன் ஏற்காவிட்டால், இந்திய ரூபாய்க்கு நல்ல மதிப்பும், மாற்றமில்லா நிலையும் உண்டு என்ற தவறான நம்பிக்கை ஏற்படக்கூடும்.

"அமெரிக்க நாட்டிலும், இங்கிலாந்திலும் 1948-ல் இருந்த விலைவாசிகளின் நிலையையும் இப்போதுள்ள நிலைமையையும் மதிப்பிட்டு, இந்தியாவில் 1948-ல் இருந்த நிலைமையையும் இப்போது உள்ள நிலைமையையும் ஒப்பிட்டு, அந்த அடிப்படையில் இந்திய ரூபாய் நல்ல மதிப்பைப் பெற்றிருக்கிறது என்று முடிவு செய்து அறிக்கை வெளியிட்டிருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன்

ஆனால் இந்தப் பொதுப்படையான முடிவு, கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் இந்தியாவில் விலைவாசிகள் 13 சதவிகிதம் உயர்ந்துள்ளது என்பதை மறைத்துவிடுகிறது.

"1956 ஏப்ரல் முதல் 'ஸ்டர்லிங்' நிலுவையில இந்தியா திங்கள்தோறும் ரூ. 35 கோடி செலவிட்டுவந்துள்ளதென்பது வேதனைக்குரியதாகும்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 1956—57ம் ஆண்டில் மொத்தம் ரூ. 200 கோடி மட்டுமே 'ஸ்டர்லிங்' நிலுவையில் செலவிட ஒதுக்கப்பட்டிருந்தது; ஆனால், 1957 ஆகஸ்டு 9-ந் தேதிவரை இந்தியாவின் 'ஸ்டர்லிங்' நிலுவையில் ரூ 450 கோடி வரை செலவழிக்கப் பட்டுள்ளது.

"இந்த நெருக்கடிக்கு முக்கிய காரணம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வரம்புக்கு மீறி முதலீடு செய்யப் பட்டதேயாகும்.

"வெளிநாடுளிலிருந்து இறக்குமதியைக் கடுமையாகக் குறைத்துள்ளது முதல் சிகிச்சை போன்றதாகும். ரூபாய் மதிப்பை குறைக்கவேண்டியது அவசியமானதாகும்."

மேலும் அவர், ரூபாய் மதிப்பைக் குறைக்க வேண்டுமென்றும், பாதுகாப்புள்ள பொருளாதாரக் கொள்கை வகுக்கப்படவேண்டுமென்றும், உற்பத்தியையும் பொருளாதார முன்னேற்றத்தையும் ஊக்குவிக்கும்முறையில் ஊதிய நிர்ணயம் இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

"இதைச் செய்வது அந்நியச் செலாவணி வசதியை அதிகப்படுத்தவும், ஏற்றுமதிக்கான உற்பத்தி முன்னேறவும் இப்போது ஏற்பட்டுள்ள நிலையைப் போக்கி, பழைய சாதக நிலைக்கும் வழி வகுக்கும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ சட்டம்

பிறப்பிக்கப்பட்டதாம்!

பாங்காக், ஆக. 22—

தாய்லாந்தில் மூன்று அமைச்சர்கள் பதவியிலிருந்து விலகிக் கொண்டனராம்.

அதனால், தாய்லாந்தில் இராணுவச் சட்டம் பிறப்பிக்சப் பட்டுள்ளதாம்.

நெய்யின் தரத்தைப் பரிசீலிக்க

ஆராய்ச்சி சாலைகள்!

தமிழ் நாட்டில் மூன்று இடங்களில் ஏற்படும்

சென்னை, ஆக. 22—

கோவை, கரூர், தாராபுரம் ஆகிய மூன்று இடங்களிலும் நெய்யின் தரத்தைப் பரிசீலிக்கும் 3 ஆராய்ச்சிசாலைகளை நிறுவும் திட்டத்துக்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளதாம்.

டின்களில் அடைத்து விற்பனை செய்யப்படும் நெய் தூய்மையானதுதானா, தரமுள்ளதுதானா என்பதை இவ்வாராய்ச்சிசாலைகள் பரிசீலித்துக் கூறுமாம்.

இத்திட்டம் முதலில் ஓராண்டுக்கு அமுலில் இருக்கும். 1957—58-ம் ஆண்டில் இத்திட்டத்துக்கு ரூ 63 600 செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளதாம்.

சேதி, கேட்டீரா!

பம்பாய், ஆக. 22—

நாட்டிலுள்ள பல்வேறு பாங்கிகளில, ஒரு கோடியே 82 இலட்சம் ரூபாய் வரை முடங்கிக்கிடக்கிறதாம். இதற்கு உரிமை கொண்டாடுபவர் யாருமில்லையாப்!

இதில்—சேவிங்ஸ் டிபாசிட் ரூ. 94 இலட்சம்; கரண்ட் டிபாசிட் ரூ 44 இலட்சம்; பிக்சட் டிபாசிட்டுகள் ரூ. 37 இலட்சம். இதர டிபாசிட்டுகள் ரூ. 6 இலட்சம். இவை தவிர, இவற்றிற்கு வட்டியாக ரூ. 1 இலட்சம் சேர்ந்துள்ளதாம்.

இவ்வாண்டு ஜனவரித் திங்கள் முதல் நாளன்று இருந்த கணக்கே இது. சென்ற ஆண்டு இருந்ததைவிட இத்தொகை ரூ. 6 இலட்சம் அதிகம் என்று ரிசர்வ் பாங்கி அறிவிக்கிறது.

தொழிற் பயிற்சிக்கு உதவிச் சம்பளம்

தென்னாட்டில் 350 பேர் தேர்வு

சென்னை, ஆக. 21—

தொழில் துறை நிறுவனங்களில் நேரிடையாகப் பயிற்சி பெற உதவிப் பணம் பெறுவதற்காக சுமார் 350 மாணவர்களை, அனைத்திந்திய தொழில் நுணுக்கக் கழகத்தின் தென் . வட்டாரக் குழு 1957—58-ம் ஆண்டுக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள், பொறியியல், தொழில் நுணுக்கப் பட்டதாரிகளும், 'டிப்ளமோ' பெற்றவர்களுமேயாவர்.

இதுவரை, அ. இ தொழில் நிறுவனங்களில் 28 இடங்களுக்கும், வட்டாரக் கிளைகளின் 319 இடங்களுக்கும் தேர்ந்தெடுப்பு முடிந்திருக்கிறது.

பட்டதாரிகளுக்கு தலைக்கு மாதம் ரூ 150-ம், 'டிப்ளமோ' தாரிகளுக்கு ரூ. 100-ம் அவர்கள் பயிற்சி பெறுங்காலத்தில் உதவிச் சம்பளமாக வழங்கப்படும். பயிற்சிக்காலம் ஒன்றுமுதல் இரண்டு ஆண்டுவரை இருக்கும்.

இரசாயன உரங்கள் வாங்குவதற்குக் கடன்

திட்டம் விரிவடைகிறது

விவசாயிகளுக்குச் சலுகைகள்

நெல், கரும்பு ஆகியவைகளுக்கு தீவிர உரமிடும் திட்டத்தின்கீழ் இரசாயன உரங்கள் வாங்குவதில் குடியானவர்களுக்குக் கடன் தருவதற்காக 1957—58-ம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் அரசாங்கம் ரூ. 68½ இலட்சம் ஒதுக்கியுள்ளது. இந்தத் திட்ட வரம்பை, யூரியா, அம்மோனியம் சல்பேட் நைட்ரேட், கேல்சியம் அம்மோனியம் நைட்ரேட் ஆகியவைகளை வாங்குவதற்கும் விரிவுபடுத்துவதென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இதுவரையில் அம்மோனியம் சல்பேட், சூபர் பாஸ்பேட் ஆகியவைகளை மட்டுமே வாங்குவதற்குக் கடன் கொடுக்கப்பட்டு வந்தது.

இரசாயன உரங்களில் ஏதாவது ஒன்றைத் தனியாகவோ, அல்லது இதர இரசாயன உரங்களுடன் சேர்ந்தோ, அல்லது அம்மோனியம் சல்பேட் ஆகவோ வாங்குவதென்றால் நெல் வயல்களுக்கு ஏகராவுக்கு ரூ. 35-ம், கரும்புக்கு ஏகராவுக்கு ரூ. 100-ம் தரப்படும்.

சொந்த ஜாமீன் மீது இப்படி வாங்கக்கூடிய கடன் உயர்ந்தபட்சம் ரூ. 500; இன்னொருவர் கூட்டாக ஜாமீன் கொடுத்தால் ரூ. 750 வரை கிடைக்கும்.

சூபர் பாஸ்பேட் வாங்குவதற்கு ஏகராவுக்கு ரூ. 15 கடன் கிடைக்கும். அதிகப்பட்ச கடன் மேல் வரம்பு, மேலே குறிப்பிட்டபடி ஆகும்.

'உற்பத்தியாளர் நலன்களையும் காக்கவேண்டும்'

உணவுத் தானிய விசாரணைக் குழுவிடம் ஆந்திரா முறையீடு

இந்தியாவில் தற்போது நிலவி வரும் உணவுத் தானிய விலை நிலவரம்பற்றி ஆராய்ந்து மத்திய அரசாங்கத்திற்கு அறிவிப்பதற்கென நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவிடம், ஆந்திர அரசாங்கம் தன் மாநிலத்தின் கருத்தைக் கூறியிருக்கிறது.

அகில இந்திய அடிப்படையில் உணவுத் தானிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நியாயமான வருமானம் கிடைக்கத் திட்டம் வகுக்கவேண்டும்; அதே நேரத்தில் பொதுமக்களின் நலனையும் மனதில் கொண்டு கொள்கையை உருவாக்கவேண்டும்.

காலத்திற்கு ஏற்றவாறும் இடத்திற்கு ஏற்றவாறும் உணவுத் தானிய உற்பத்திக்கும், விநியோகத்திற்கும் உகந்த முறையில் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

உழவர்களின் பொருளாதாரம் பாதிக்கும் வகையில் உணவுத் தானியங்களின் விலை குறைவதையும் கட்டுப்படுத்த வேண்டும். அத்தகைய பொருளாதாரக் குறையுடன் உள்ள விலையின் காரணமாக எங்கும் பாதிக்கப்பட்ட நிலையில், எதிர்காலத்தில் உற்பத்தி பெருகத் தடையும் ஏற்படும். மத்திய அரசாங்கத்தின் உணவுக் கொள்கை உணவுத் தானியங்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

ஆந்திர மாநிலத்தில் 1961-ல் மொத்தம் 70·5 இலட்சம் டன் உணவுத் தானியங்கள் பயிராகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மாநில மக்களின் தேவைக்குப் போக, மேலும் 11 5 இலட்சம் டன்கள் மிகுதியாக உணவுத் தானியங்கள் ஆந்திரத்தில் இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

சிதம்பரம் வட்டத்தில் அண்ணா

நான்கு ஊராட்சி மன்றங்கள் வரவேற்பு

சிதம்பரம், ஆக. 21—

25—8—57 ஞாயிறு அன்று அண்ணா அவர்களுக்கு, கீழ்க்கண்ட நான்கு பஞ்சாயத்துகளில் வரவேற்பு அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது :—

குச்சிப்பாளையம் :

குச்சிப்பாளையம் தி. மு. க. கட்டிடத் திறப்புவிழாவிற்காக 25—8—57 மாலை 3 மணியளவிற்கு, அண்ணா வருகையின் போது, பஞ்சாயத்து போர்டு சார்பில் வரவேற்பு கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தில்லை விடங்கன் :

19—8—57 மாலை 3 மணிக்கு பஞ்சாயத்தின துணைத் தலைவர் திரு. ஜி. பக்கிரிசாமி (சேதுவராயர்) அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில், 25—8—57-ல் சிதம்பரம் வரும் அண்ணா அவர்களுக்கு வரவேற்பு கொடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கிள்ளை :

29—7—57 பகல் 2 மணியளவில் பஞ்சாயத்துத்தலைவர் திரு. கே. வேல்மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 25—8—57-ல் சிதம்பரம் வரும் அண்ணா அவர்களுக்கு வரவேற்பளிப்பதென ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கீரப்பாளையம் :

25—8—57 அன்று சிதம்பரம் வட்டத்தில் அண்ணா சுற்றுப் பிரயாணத்தின்பொழுது வரவேற்பு கொடுப்பதென பஞ்சாயத்துபோர்டு தலைவர் திரு. இராமசாமி தலைமையில்நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கம்யூனிஸ்டு கட்சியிலிருந்து

விலகி விட்டனர்!

"திண்டுக்கல் 15-வது வார்டு, குமரன் தெருவில் இருக்கும் நாங்கள் இருவரும் நீண்டகாலமாக கம்யூனிஸ்டுக் கட்சியிலிருந்து வந்தோம். சமீபகாலமாக அக்கட்சியின் கொள்கைகளும், அவர்கள் திண்டுக்கல்லில் செய்துவரும் போலிப் பிரச்சாரமும் மிகவும் அராஜகமாக இருப்பதால், நாங்கள் அக்கட்சியிலிருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து பணியாற்றுவதென முடிவு செய்துவிட்டோம்" எனத் தோழர்கள் அடைக்கலம், ஏ. ஜான்பா என்னும் இருவரும் தெரிவித்துக் கொள்கின்றனர்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம்

இயந்திர சாதனங்களை ஆராய வெளிநாடுகளுக்கு நிபுணர்கள் சென்றுள்ளனர்

சென்னை, ஆக. 20—

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டத்தில் இதுவரையில் 7 இலட்சம் கன கெசத்துக்கு மேல் மண் அகற்றப்பட்டிருக்கிறது.

இத்திட்டத்தின் துணையிடும் எஞ்சினியரும், மற்றொருவரும், ஜெர்மனியில் நவீன முறைகளில் ஒருமாத காலமாகப் பயிற்சி பெற்றுவருகின்றனர்; இவர்கள் இம்மாத இறுதியில் இந்தியா திரும்புவர்.

மண்ணைத் தோண்டி அகற்றும் சாதனங்களின் அமைப்பு, அவற்றை இயக்கும்விதம், அவற்றின் பராமரிப்பு ஆகியவைபற்றி ஆராய நான்கு எஞ்சினியர்களைக் கொண்ட குழுவொன்று இம்மாத ஆரம்பத்தில் மேற்கு ஜெர்மனிக்குச் சென்றுள்ளது; மற்றொரு குழு 16-ந் தேதி சென்றுள்ளது; இக்குழுவினர் அக்டோபர் மாத முற்பகுதியில் இந்தியா திரும்பக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இரசாயன பிரிவைச் சேர்ந்த எஞ்சினியர் ஜெர்மனி, ஹாலந்து, பின்லாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய உற்பத்திச்சாலைகளுக்குச் சென்று அங்குள்ள சாதனங்களைப் பார்வையிடுவார்; இதர அதிகாரிகள் மேற்கு ஜெர்மனி, கிழக்கு ஜெர்மனி, செக்கோஸ்லோவேக்கியா, பிரிட்டன் ஆகிய இடங்களிலுள்ள நிறுவனங்களுக்குச் சென்று, அவற்றின் அமைப்பு முறைகளை ஆராய்வார்கள்.

தலைமை நிலைய செய்தி

★

18—8—57 காலை 11 மணிக்கு ஆரணியில் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் மாவட்டச் செயலாளர் தி. ந. சம்பந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது; அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

மாவட்டச் செயலாளர் அவர்களின் தந்தையார் திரு. ல. நடேசனார் இயற்கையெய்தியது குறித்து அனுதாபம் தெரிவித்தும்;

மாவட்டத்தில் புதியதாகத் துவக்கப்பட்ட கிளைக் கழகங்களை மாவட்டக் குழு ஏற்றுக் கொண்டும்;

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக 3-வது மாநாட்டை அக்டோபர் திங்களில் நடத்துவதென்றும்;

மாநாட்டின் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஏனைய முடிவுகளை மேற்கொள்வதற்கும் 17 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்தும்;

மாவட்டக் கழகத்தின் வரவு-செலவுக் கணக்குகளை பரிசீலித்து மாவட்டக் குழு ஏற்றுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ரஷ்யாவில் தமிழ்த் தொண்டு

"லெனின்கிராட் பல்கலைக் கழகத்தில் தானே தமிழ் படித்துத் தமிழ்ப் பணிபுரிகிறார் ஒருவர். ரூதின் என்பது அவர் பெயர். அவர் தமிழை அழகாகப் பிழையின்றிப் பேசுகிறார்; மொழி இலக்கணம் பயின்றுள்ளார்; பல மொழிகளில் வல்லவர்; தமிழைச் சிறக்க மதிக்கிறார்.

"1929-ஆம் ஆண்டிலேயே இங்கு ஒருவர் தமிழுக்கு இலக்கணம் இயற்றியிருக்கிறார். 'மிகத் தலைமையான மொழி தமிழ்' என்று பல காரணங் காட்டி எழுதியுள்ளார்.

"கண்ணன், ஐங்குன்றூர், பெருமாள் என மூவர் தங்கள் பெயர்களைத் தமிழில் மாற்றிக் கொண்டுள்ளனர்"

—இவ்வாறு மாஸ்கோவில், ரஷ்ய பண்பாட்டு அமைச்சர் அலுவலகத்தில் தமிழ்ப்பணி ஆற்றிவரும் திரு. பண்டித. இராம. மீனாட்சிசுந்தரம் பிள்ளை எம்.ஏ., தம் நண்பர் ஒருவருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. மீனாட்சிசுந்தரம், தற்போது சென்னை அரசினர் கலைக் கல்லூரியினின்றும் மூன்றாண்டு காலம் விடுமுறை பெற்று, ரஷ்ய அரசினர் அழைப்பின் பேரில், அங்குத் தமிழ்ப் பணிஆற்றி வருகிறார். அவர் தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். அது வருமாறு :—

"அன்பரீர்! இங்குப் பலர் ஆர்வத்துடன் தமிழ் பயில்கின்றனர்; ஆனால் சுவடியின்றி ஒரே பழஞ்சுவடியை நிழற்படம் எடுத்துப் பயில்கின்றனர். தமிழ்ச் சங்கம் நிறுவப் பெறுகிறது. ஒரு தமிழன் இங்கு வந்து செய்யும் முதல் முயற்சி. தமிழ் இங்கு வேரூன்ற வேண்டும்.

"தமிழரும் தமிழன்பரும் சுவடிகள் சில, பழையனவேனும் பதிவுச் சுவடி அஞ்சலில் அடியிற காணும் முகவரிக்கு விரைவில் அனுப்பியுதவ வேண்டுகிறேன். விலை கொடுத்து வாங்கச் சட்டம் இடம் தரவில்லை. அன்புகூர்ந்து தமிழ்ப்பணிக்கு உதவ முந்துக.

விரைவில் தமிழ் வானொலி மாஸ்கோவிலிருந்து பரவும்.

வணக்கம்.

முகவரி :

U S. S. R., Moscow,
Zubovsky Boulevard 21,
Pandit. P. R. M. Pillai, M A

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

வடாற்காடு மாவட்ட

தி.மு.கழக 3-வது மாநாடு

★

1957 செப்டம்பர் 21, 22 சனி, ஞாயிறு கிழமைகளில்

திருவண்ணாமலையில்

நடைபெறும்

★

21—9—'57 சனியன்று

இந்தி பொது மொழி எதிர்ப்பு மாநாடு

22—9—'57 ஞாயிறன்று

கழகப் பொது மாநாடு

★

மற்ற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்

—வரவேற்புக் குழு

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

1956—57ல் 1,31,721 குரங்குகள் விற்றனர்!

1956—57-ல் மொத்தம் 1,31,721 குரங்குகளை இந்திய அரசாங்கம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது என்று தெரியவருகிறது.

இந்தக் குரங்கு விற்பனை மூலம் இந்திய அரசாங்கத்திற்கு ரூ. 50 இலட்சம் அந்நிய செலாவணி வசதி கிடைத்துள்ளதாம்.

இந்தித் திணிப்பு:

குடந்தை மாணவர்கள் கொதிப்பு

குடந்தை, ஆக. 22—

அண்மையில் வெளியான இந்தித் திணிப்புக் குழுவின் அறிக்கையைக் கண்டு தமிழ்நாட்டு மாணவர்கள் கொதிப்படைந்திருக்கின்றனர்.

குடந்தை அரசினர் கல்லூரி மாணவர்கள் அனைவரும் 21-8-57 அன்று காலை (அரைநாள்) கல்லூரிக்குச் செல்லாமல் இந்தித் திணிப்புக்குத் தங்கள் எதிர்ப்பைக் காட்டிக்கொண்டனர்.

எல்லா மாணவர்களும் ஒற்றுமையுடன் தங்கள் எதிர்ப்பை ஏகோபித்துத் தெரிவித்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

வட சென்னைக்கு தண்ணீர் வசதி

நகரசபையின் முயற்சி

ஏழைகளும், தொழிலாளர்களும் அதிகமாகக் குடியிருக்கும் வடசென்னையில் தண்ணீர் வசதி இல்லாத அவலநிலையைப் போக்க சென்னை நகரசபை திட்டம் வகுத்தது தெரிந்த ஒன்றாகும்.

இன்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் சங்கடம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சென்னை அரசாங்கம் வடசென்னை மக்களுக்கு உதவியளிக்க முன்வருவதாக இல்லை.

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இங்கிலாந்திலிருந்து குழாய்கள் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளதாம். 1960-க்குள் இத்திட்டத்தை முடிக்கவும் சென்னை நகரசபை முடிவு செய்திருந்ததாம்.

ஆனால், வெளிநாட்டிலிருந்து குழாய்கள் இறக்குமதி செய்ய அனுமதி பெறுவதில் சங்கடம் இருப்பதாகவும் அந்நிய செலாவணியில் இந்தியப் போராசுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்றும் சென்னை அரசாங்கம் அறிவித்துள்ளதாம். தேவைப்படும் குழாய்களை, இந்தியாவில் தயாரிக்கப்பட்டவைகளைக் கொண்டே திட்டத்தை முடிக்குமாறு யோசனை கூறியுள்ளதாம்.

மீண்டும் சென்னை நகரசபை இத்திட்டத்தை ஆராய்ந்தபோது 'குல்தி'யில் உள்ள இரும்பு எஃகு நிறுவனத்திடமிருந்து 30 அங்குலக் குழாய்களை வாங்கி திட்டத்தை முடிப்பதானால், திட்டம் 1962-ல் தான் முடிவடையும் என்றும், அதே திட்டத்தை 33 அங்குலக் குழாய்களை வாங்கி முடிப்பதில் சுமார் 2½ ஆண்டுக் காலம் முன்னதாகவே முடிக்கமுடியும் என்றும், முதலில் திட்டமிட்டவாறு 1960-ல் திட்டத்தை நிச்சயம் முடித்துவிடலாம் என்றும் மதிப்பிட்டுள்ளது.

வடசென்னையில் நிலவிவரும் தண்ணீர்ப் பஞ்சத்தைக் கருதியும், தண்ணீர் வசதி ஏற்படுத்த வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தும், திட்டத்தை துரிதமாக முடிக்க நகரசபை முடிவு செய்துள்ளது.

இதன் காரணமாக 33 அங்குலக் குழாய்களை வாங்குவதால், சென்னை நகரசபைக்கு ரூ. 3,93,700 அதிகப்படியாக செலவு ஏற்படும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் சபையில் சம்பத் முழக்கம்

சிதம்பரம் வட்டத்தில் அண்ணு

நிகழ்ச்சிகள்

★

25—8—57 : ஞாயிறு

காலை 10 மணி : கொப்பாளையம் பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

மாலை 3 மணி : குச்சிப்பாளையம் பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

3-30 மணி : கழகக் கட்டிடத் திறப்புவிழா

5 மணி : தில்லைவிடங்கன் பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

5-30 மணி : கிள்ளை பஞ்சாயத்து போர்டு வரவேற்பு

6 மணி : கிள்ளை கழகப் பொதுக் கூட்டம்

7-30 மணி : சிதம்பரம் டவுன் பொதுக்கூட்டம்

30—8—57 வெள்ளி :

மாலை 6 மணி : சீமுஷ்ணம் கழகத் துவக்கவிழா

சுற்றுப்பயண நிகழ்ச்சிகளில் தில்லை-வில்லாளன் அவர்களும் கலந்துகொள்கிருர்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்களுக்கு வரவேற்பு

25—8—57-ல் நெல்லை சந்திப்புக்கு வருகை தரவிருக்கும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேட்டை வழியாகச் செல்லும் போது, பேட்டை 'அண்ணு அறிவக'த்தின் சார்பில் ஓர் வரவேற்பு அளிக்கப்படும். அதன் பிறகு நெல்லை நகர் வீதி வழியாக ஊர்வலம் புறப்படும்.

பண்ணுருட்டியில் கழகக் கொடியேற்று விழா

25—8—57 மாலை 5 மணிக்கு நகர தி. மு. க. செயலாளர் தோழர் ந. இராசகோபால் தலைமையிலும் தோழர் காஞ்சி—கல்யாணசுந்தரம் அவர்கள் முன்னிலையிலும் ஒரு மாபெரும் ஊர்வலம் தட்டாஞ்சாவடியிலிருந்து புறப்பட்டு, நகரின் முக்கிய இடங்களில் கொடிகளை ஏற்றிவிட்டு மாலை 6 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கும் தண்டபாணி டாக்கிஸ் திடலையடையும்.

கரூர் நகர தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்களுக்கு

25—8—57 மாலை 4 மணிக்கு, கரூர் நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம், நகரசபை உறுப்பினர் தோழர் இரா. வைரப் பெருமாள் இல்லத்தில் நடைபெறும்; அதுபோது, பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அருப்புக்கோட்டை தி. மு. கழகப் போது உறுப்பினர்களுக்கு :

25—8—57-ல், மாவட்டச் செயலாளர் இ. ல. ம. சௌந்திர பாண்டியன் தலைமையில், திருநகரம், சிந்தனை மாளிகையில் மேற்படி கூட்டம் நடைபெறும்.

சேலம் 18-வது வட்டத் தி.மு.க. உறுப்பினர்கட்கு:

24—8—57 இரவு 8 மணிக்கு, சேலம் அம்மாப்பேட்டை, மெயின் ரோடு, 18-வது வட்டத் தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் புதிய நிர்வாகிகளின் தேர்தல் கூட்டம் நடைபெறும்.

சுகாதாரப் படக் காட்சி

24—8—57 மாலை 6½ மணிக்கு, சென்னை—இராயபுரம் மீனாட்சியம்மன் பேட்டை, ஆதம் சாகிப் தெரு, 162-வது சர்க்கிளில் நகரசபை சுகாதார இலாகாவின் திரைப்படக் காட்சி நடைபெறும்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கள் தெரிவித்திருக்கும் கருத்துக்குமேல் நான் எதும் கூறத் தேவை இல்லை. தீர்க்கப்படாத பிரச்சினைகள் இன்னும் பிரச்சினைகளாகவே இருக்கின்றன. மாநிலப் புனரமைப்பு முடிந்து விட்ட ஒன்று என சர்க்கார் கூறுவதிஞலேயே, ஏதோ மந்திரத்தால், அந்தப் பிரச்சினைகள் தீர்ந்துவிட்டது போலாகி விடாது.

"உதாரணமாக, மாநிலப் புனரமைப்பின்போது, தமிழ் மக்களையே பெரும்பாலும் கொண்ட சில பகுதிகள், தமிழ் நாட்டுடன் இணைக்கப் படவில்லை. இதனுல், அந்தப் பகுதிகள் தங்கள் மாநிலத்துடன் நியாயமாக இணைக்கப்பட்டிருப்பதாத ஆந்திர, மலையாள சகோதரர்கள் கருதுகின்றனர்.

வாக்கெடுப்பு நடத்துக!

"பாரபட்சமின்றி நியாயமான முறையில், இந்தப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணவேண்டுமானுல், உள்ள ஒரே வழி, அந்தப் பகுதிகளில் ஒரு வாக்கெடுப்பு நடத்துவதுதான். இந்த முறையில் மேற்கோள்ளப்படும் எந்த முடிவும், அண்டை மாநிலங்களில் உள்ள அனைவராலும் ஒப்புக் கொள்ளத்தக்கதாகும்.

மக்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதில் பிடிவாதமேன் ?

"மேலும், சென்னைக்குத் 'தமிழ் நாடு' எனப் பெயரிடவேண்டும் என்ற கோரிக்கையைப்பொறுத்து சர்க்கார், இதுபோன்ற ஒரு சிறு விவகாரத்தில்கூட ஏன் மக்களின் விருப்பத்தை நிறைவேற்றப் பிடிவாதமாக மறுக்கிருர்கள் என்பதை என்னுல் புரிந்து கொள்ள முடியவில்லை? இது போன்ற சம்பவம், சர்க்கார் சிறு விவகாரங்களையும்கூட பெரும் சிக்கலான—தொல்லை தரக் கூடியதாக ஆக்கிவிடும் பழக்கத்தை வளர்த்துக் கொள்கிருர்கள் என்பதற்கு தெளிவான எடுத்துக் காட்டாகிறது.

அடுத்தாற்போல், இந்திய யூனியனின் ஆட்சிமொழி விவகாரத்தைப் பொறுத்து, சர்க்கார் அந்தப் பிரச்சினையை எச்சரிக்கையுடனும், விவேகத்துடனும் அணுக வேண்டும்.

'இந்தோ—ஆரிய மொழிகளை பேசும் வடநாட்டு மக்களுக்கும், திராவிட மொழிகளைப் பேசும் தென்னுட்டு மக்களுக்கும். இடையே நல்லெண்ணமும், இணக்கமும் அமைதியும் கொண்ட ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும் என சர்க்கார் உண்மையாகவே கருதுவார்களேயானுல், அவர்கள், இந்திமொழி வழங்காத பகுதி மக்கள்மீது இந்தியைத் திணிக்க விரும்புகிறவர்களின் முரட்டுத்தனமான மனே பீஷ்டங்களிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள எல்லா முயற்சிகளும் செய்தாக வேண்டும்.

"தென்னுட்டின் அனுபவசாலிகளும், அறிவாளிகளும்—ஏன் நம்பிக்கைக்குப் பாத்திரமான காங்கிரஸ்காரர்களுங்கூட அவ்வப்போது தந்துவந்திருக்கும் வேண்டுகோள்கள், புத்திமதிகள், எச்சரிக்கைகள் இவற்றையும் மீறி சிலர், இந்தி வழங்காத மிகுதி மக்கள்மீது இந்தியை எப்பாடுபட்டேனும்—என்ன ஆனுலும் திணித்துவிடவேண்டுமென எண்ணுகிருர்கள் என்பதற்குத் தெளிவான அறிகுறிகள் இருக்கின்றன.

ஒற்றுமை உருவாக இவைகளா வழிகள் ?

"இவர்கள், தங்களின் பேராசைத் திட்டத்திற்கு 'ஒற்றுமை' என்ற சொல்லை அடிக்கடிப் பயன்படுத்துகின்றனர்.

"நாமெல்லாம் அறிந்திருக்கிறபடி ஒற்றுமை என்பது சட்டத்தாலோ, பலாத்காரத்தாலோ உருவாக்கப்பட முடியாத ஒரு ஒரு உணர்ச்சியாகும்; பரஸ்பர அன்பினுலும், மரியாதையினுலும் பிறக்க வேண்டிய ஒரு உணர்ச்சியாகும்.

"பலாத்காரத்தை உபயோகிக்கும்போது, அதுவும் ஒற்றுமைக்காக என்று கூறி பலாத்காரத்தை உபயோகிக்கும்போது, அவர்கள் விரும்புவது—ஒற்றுமையை அல்ல—மாருக, நிர்ப்பந்திக்கப்பட்ட ஒருமைப்பாட்டைத்தான் என்பதை நாம் நன்ருக அறிந்துகொள்ள முடிகிறது.

(பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்)

கண்ணதாசன் அன்னையார் மறைவு

'தென்றல்' ஆசிரியர் தோழர் கண்ணதாசன் அவர்களின் அன்னையார் விசாலாட்சி அவர்கள் இன்று காலை (23-8-57) மூன்று மணி அளவில், சென்னை—இராயப்பேட்டை, பெசண்ட் ரோடிலுள்ள ஏ. எல். எஸ். சீனிவாசன் அவர்களின் இல்லத்தில் இயற்கை யெய்திஞர் என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கோள்கிருேம்.

விசாலாட்சி அவர்கள் கடந்த சில நாட்களாக நோய்வாய்ப் பட்டிருந்தார்கள். சென்ற புதன் கிழமை அவர்கள் சிறுகூடல்பட்டியிலிருந்து சென்னைக்குக் கொண்டுவரப் பட்டார்.

விசாலாட்சிக்கு மூன்று ஆண் மகவுகளும், ஆறு பெண் மகவுகளுமுண்டு; தோழர் கண்ணதாசன் அவர்கள் எட்டாவது குழந்தையாவார். மற்ற இருவரில் ஒருவர் மதருஸ் பிக்சர்ஸ், ஏ. எல். எஸ். ப்ரொடக்ஷன்ஸ் உரிமையாளர் ஏ. எல். எஸ். சீனிவாசன்; இன்னெருவர் தென் மாவட்ட காங்கிரஸ் முன்னேடிகளில் முதன்மையானவர்-பெயர் கண்ணப்பன்.

விசாலாட்சி தனதுகடைசிமூச்சு வரை தனது மூன்று புதல்வர்களுடனும் பேசிக்கொண்டிருந்தார்; உயிர் பிரிவதற்கு மூன்று நிமிடங்களுக்கு முன்புகூட, தன்னுடைய பெண் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டார்கள்.

விசாலட்சி அவர்களுக்கு வயது 67. இரண்டாண்டுகளுக்கு முன்புதான் அன்னுரது கணவர் சாத்தப்பர் சிறுகூடல் பட்டியில் காலமானுர்.

வருகிற 29-ம் தேதியன்று அன்னுரது பேத்திக்கு திருமணம் நடைபெற ஏற்பாடாயிருந்தும் அதைக் காண முடியாதவராய் விசாலட்சி இறந்துவிட்டார்.

இறுதிச் சடங்குகள் சென்னையிலேயே செய்து முடிக்கப் பட்டன.

அன்னையை இழந்து துயரத்திலாழ்ந்திருக்கும் தோழர் கண்ணதாசன் அவர்களுக்கும் ஏ. எல். எஸ். சீனிவாசன், கண்ணப்பன் ஆகியோருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிருேம். (ஆ-ர்)

கலை நிகழ்ச்சி ஒத்திவைப்பு

★

கண்ணதாசன் அவர்களின் அன்னையார் இன்று காலை திடீரென்று இயற்கை யெய்திவிட்டமையால், 25—8—57-ந் தேதியன்று, சென்னை தியாகராயநகர் வாணிமகாலில் நடைபெற இருந்த 'தென்றல்' கலை நிகழ்ச்சி ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

நிறுவனர் :
எஸ். வீரய்யா

முக்கிய அறிவிப்பு

கண்ணதாசன் அவர்களின் அன்னையார் இன்றுகாலை திடீரென சென்னையில் இயற்கை யெய்திவிட்டமையால், தோழர் கண்ணதாசன் கலந்துகொள்ள இருந்த எல்லா பொது நிகழ்ச்சிகளும் தற்காலிகமாக ரத்து செய்யப்படுகின்றன.

கழகக் கூட்டங்கள்

★

சிதம்பரம் :
டவுன் ஆல் திடலில்
25—8—57 இரவு 7 மணிக்கு
தலைவர் : இரத்தின-பாலகுருசாமி
பேசுவோர் :
அண்ணு
தில்லை-வில்லாளன்
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ.
எம். செல்வராஜ் எம்.எல்.ஏ.
பொன்-சொக்கலிங்கம்
புலவர் கூ. ஆறுமுகம்

★

தச்சநல்லூர் :
வ. உ. சி. திடலில்
25—8—57 இரவு 9 மணிக்கு
தலைவர் :
இரத்தினவேல் பாண்டியன்
பேசுபவர் :
இரா. நெடுஞ்செழியன்

★

சிக்கல் :
கீழவீதியில்
25—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : பி. தட்சிணுமூர்த்தி
பேசுபவர் : என். வி. நடராசன்

★

பண்ணுருட்டி :
தண்டபாணி டாக்கிஸ் திடலில்
25—8—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : க. கோவிந்தன்
பேசுவோர் :
காஞ்சி. கல்யாணசுந்தரம்
வே. கிருஷ்ணமூர்த்தி எம் ஏ.
ஏ. எஸ். வேணு பி ஏ.
வி. டி. அரசு

★

கோவை :
(17-வது வட்டம்)
25—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : கோபால்
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து எம். எல் ஏ
எஸ். ஏ. இராசமாணிக்கம்
மு. இராமநாதன்

★

புலியகுளர் :
(கோவை)
கிருஸ்தவ பெண் பாடசாலை
முன்புறமுள்ள அழகிரி திடலில்
24—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : பு. நா. ஆறுமுகம்
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.
கி. ஆ. குப்புராசு
சே. அ. இராசமாணிக்கம்

★★★★★★★★★★★★★★★★★★

முத்தமிழ் விருந்து !

'திராவிடன்'

11-ம் ஆண்டு துவக்க சிறப்பு மலர்

★

தெவிட்டாத தெள்ளமுது
அரசியல் களஞ்சியம்

★

விலை அணு எட்டு

★

வெளிவந்துவிட்டது — விற்பனையாகிறது. உள்ளூர் ஏஜெண்டுகள் மூலம் மலருக்கு முந்துவீராக.

விவரங்களுக்கு :
'திராவிடன்'—சென்னை-1

★★★★★★★★★★★★★★★★★★

கோவை 13-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு :

25—8—57 காலை 9 மணிக்கு கழகச் செயற்குழுக் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும்; அதுபோது, திராவிட நாடு பிரிவினை வாரம் கொண்டாடுவது குறித்து ஆலோசிக்கப்படும்.

மயிலை அப்துல் மஜீத் படிப்பக உறுப்பினர்களுக்கு :

24—8—57 இரவு 9 மணிக்கு, மயிலை பாஷா தோட்டம் அப்துல் மஜீத் படிப்பகத்தின் செயற்குழுக் கூட்டம் தோழர் எம். ஏ. சுக்கூர் தலைமையில் நடைபெறும்.

சென்னை—புதுவண்ணை
அண்ணு படிப்பகத் திறப்புவிழா

24—8—57 மாலை 6 மணிக்கு புதுவண்ணையம்பதி-திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் மேற்படி விழா நடைபெறும். தோழர் என். சீவரத்தினம் தலைமை வகிப்பார். தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஆர். ஜார்ஜ், அன்புரோஸ் பேசுவர்.

அம்பாசமுத்திரம் வட்ட
ஆரம்ப ஆசிரியர்கள் மாநாடு

இரா. நெடுஞ்செழியன்

துவக்கிவைப்பார்

25—8—57 காலை 10 மணிக்கு அம்பாசமுத்திரம் வட்ட ஆரம்ப ஆசிரியர்கள் மாநாடு பாப்பாங்குளத்தில் நடைபெறும்; மாநாட்டினை தி.மு.க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் துவக்கிவைப்பார்.

தெள்ளூர் :
(ஆரணி வட்டம்)
25—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : நா. மாணிக்கம்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
களம்பூர் அண்ணமலை எம். எல். ஏ.
ஆரணி செல்வஅரசு
அ. கருத்தோவியன்
மு. தருமராசன்

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அரசிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.